பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(03.09.2022 முதல் 07.09.2022 வரை)

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182
E-mail: agronaas2012@gmail.com தொ. நகல் (அலுவலகம்): 04368-261260

அறிக்கை எண்: 070 (09) PJN/GKMS/2022 தேதி: 02.09.2022

### காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (28.08.2022 முதல் 01.09.2022 வரை) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -07.09.2022 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 28/08 | 29/08 | 30/08 | 31/08 | 01/09 | | நாள்-1 03/09 | நாள்-2 04/09 | நாள்-3 05/09 | நாள்-4 06/09 | நாள்-5 07/09 |
| 4.0 | 0 | 13.5 | 0 | 12.8 | மழை (மி.மீ) | 2 | 4 | 6 | 6 | 26 |
| 34 | 34 | 33 | 32 | 30 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 29 | 29 | 28 | 28 | 28 |
| 25 | 25 | 26 | 26 | 25 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 25 | 25 | 24 | 24 | 24 |
| 3 | 4 | 5 | 7 | 6 | மேக மூட்டம் | 4 | 4 | 8 | 8 | 8 |
| 62-87 | 69-86 | 67-92 | 90-89 | 76-93 | ஈரப்பதம் (%) | 50-84 | 50-80 | 50-80 | 50-80 | 50-80 |
| 2 | 2 | 2 | 3 | 1 | காற்றின் வேகம் (கி.மீ) | 12 | 12 | 12 | 10 | 12 |
| மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு வட மேற்கு | மேற்கு வட மேற்கு | மேற்கு வட மேற்கு | காற்றின் திசை | தெற்கு தென் மேற்கு | தெற்கு தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு |

## எதிர்பார்க்கப்படும் வானிலை (03.09.2022 முதல் 07.09.2022 வரை):

- → செப்டம்பர் 03 லிருந்து 06 வரை அநேக இடங்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது.
- → செப்டம்பர் 07 தேதியில் அநேக இடங்களில் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.
- அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்ப நிலை 24-29 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 50-84 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் மணிக்கு 10-12 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.
- செப்டம்பர் 07 லிருந்து 13 வரை மழை (4.86 மி.மீ), அதிகபட்ச வெப்பநிலை (29.73 டி.செ) மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை (23.81டி.செ) இயல்பாக இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

## வேளாண் அறிவுறை

| பயிர்கள் | பயிர் நிலை | அறிவுறை |
|---|---|---|
| இடி மின்னல் எச்சரிக்கை | | செப்டம்பர் 03 லிருந்து 07 வரை இடியுடன் மின்னல் ஓரிரு இடங்களில் இருப்பதற்கு வாய்ப்புள்ளது. இடி மின்னலின் போது தனியாக இருக்கும் மரத்தின் கீழோ அல்லது அடர்ந்த மரங்களுக்கு கீழோ கால்நடைகளை தங்க வைப்பதையும், டிராக்டர், பண்ணை இயந்திரங்கள் மற்றும் இதர உலோகங்களால் செய்யப்பட்ட பண்ணை உபகரணங்களுக்கு அருகில் விலங்குகள் |

| | | |
|---|---|---|
| | | செல்வதையும் தவிர்த்து கால்நடை கொட்டகைக்குள் வைத்திருந்து மின்னல் தாக்காதவாறு விலங்குகளை பார்த்துக்கொள்ளவும். |
| | **விதைப்பு** | சம்பா பருவத்திற்கு ஏற்ற நீண்ட கால நெல் இரகங்களான சி. ஆர் 1009 (CR 1009), ஏடிடீ 50 (ADT 50) மற்றும் கே கே எல் ஆர்1 (KKLR 1) விதைகளை பயன்படுத்தலாம். |
| | **விதை நேர்த்தி** | ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கார்பன்டசிம் அல்லது பைரோகுயிலான் அல்லது 2 மி.லி. டிரைசைக்லோசோல் கரைசல் கலந்து 10 மணி நேரம் ஊர வைத்து பின்னர் வடிகட்டவும். |
| கால்நடை | **தடுப்பூசி** | கால்நடைகளைத் தாக்கும் கோமாரி நோய் மற்றும் தொண்டை அடைப்பான் நோய்களுக்கு மழைக்காலம் தொடங்கும் முன்னர் தடுப்பூசிகளைப் போட வேண்டும். குளம், குட்டைகளில் தண்ணீர் குடிக்கும் மாடுகளுக்கும் அவற்றைச் சுற்றி மேயும் மாடுகளுக்கும் தட்டைப் புழுவிற்கான குடற்புழு நீக்க மருந்தினைப் கொடுக்க வேண்டும். |
| | **கொட்டகை நிர்வாகம்** | மழைக்காலம் வருவதற்கு முன்பு கால்நடைகள்/ஆடு/கோழி கொட்டகையின் கூரைகளை சரி செய்யவும். இல்லையெனில், அழுக்கு கொட்டகைகளில் மழை நீர் கசிவதால் அமோனியா உற்பத்தியும் மற்றும் இரத்தக் கழிச்சல் நோயும் ஏற்பட வாய்ப்புள்ளது. |
| | | ஆடுகளில் குளம்பு சிதைவு நோயைத் தடுக்க தரையின் விரிசல்கள் மற்றும் மேடு பள்ளங்களை சரி செய்து மழை நீர் தேங்காமல் பார்த்துக்கொள்ளவும். |

**குறுஞ்செய்தி:** அடுத்த சில தினங்களில் லேசான முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால், பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதை ஒத்திவைக்கலாம்.

**முதல்வர்**